**13.11.2025**
**MCOP.57/2024**
**ம.சா.1. 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

விபத்து எப்போது நடைபெற்றது என்றால் 08.11.2023–ல். விபத்து நடந்த சமயத்தில் நான் எங்கு சென்றிருந்தேன் என்றால் சமையல் வேலைக்கு பட்டுக்கோட்டைக்கு சென்றிருந்தேன். நான் தாக்கல் செய்துள்ள எனது நிரூபண வாக்குமூலத்தில் நானும், எனது உறவினரும் திருமண மண்டபத்திற்கு சுத்தம் செய்வதற்காக சென்றோம் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சமையல் வேலை பார்க்கவில்லை என்றும், சுத்தம் செய்யும் வேலை பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. கல்யாணம், காது குத்து வருடத்திற்கு 3 மாதங்கள் மட்டும் தான் நடக்கும் என்று சொன்னால் சரிதான். நான் கல்யாண மண்டபத்திற்கு வேலைக்கு சென்று மாதம் ரூ.15,000/– வருமானம் வரவில்லை என்றும் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பட்டுக்கோட்டையில் எந்த திருமண மண்டபத்தில் நான் வேலை பார்த்து வந்தேன் என்றால் மைனர் பில்டிங் அருகில் உள்ள புதிதாக கட்டப்பட்ட பங்களா திருமண மண்டபத்தில் வேலை பார்த்தேன். நான் சொல்வது போல் மேற்படி திருமண மண்டபத்தில் வேலை பார்த்திருந்தால் அதன் உரிமையாளரிடமிருந்து மாத வருமானம் ரூ.15,000/–ற்கு சம்பளப்பட்டியல் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. எனது வயது, வருமானம்

குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வேலைக்கு சென்றுவிட்டு எந்த பேருந்து நிறுத்தத்தில் இறங்கினேன் என்றால் பாண்டி பேருந்து நிறுத்தத்தில் இறங்கினேன். நான் மட்டும் பேருந்திலிருந்து இறங்கினேனா என்றால் என்னுடன் அன்புக்கரசி என்பவரும் இறங்கினார். பேருந்தில் இருந்து இறங்கி எந்த திசை நோக்கி சென்றேன் என்றால் வலது புறம் சென்றேன். நான் சாலை விதிகளை அனுசரிக்காமலும், கவனக்குறைவாகவும் சென்றதால் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் பஸ்ஸில் இருந்து இறங்கி இடது புறமாக தான் செல்ல வேண்டும் என்றும், நான் சாலை விதிமுறைகளை அனுசரிக்காமல் வலது புறமாக சென்றதால் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இருசக்கர மோட்டார் சைக்கிளில் வந்த ஓட்டுநர் சாலை விதிகளை அனுசரித்து கவனமாக தான் ஓட்டி வந்தார் என்றும், என்னுடைய அஜாக்கிரதையினால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு எவ்வித பொறுப்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து ஏற்பட்டவுடன் எந்த மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன் என்றால் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்காக திருவாரூர், மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு சென்றேன். நான்

சிகிச்சை பெற்றது எல்லாம் அரசு மருத்துவமனையில் தான் என்றால் சரிதான். சில சமயங்களில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். நான் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தால் அதற்கான ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததால் மருத்துவ செலவீனங்கள் குறித்து எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றும், நஷ்ட ஈடு தொகை பெறுவதற்காக காயத்தை மிகைப்படுத்தி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு நான் தான் காரணம் என்பதால் 3ம் எதிர்மனுதாரரிடமிருந்து எனக்கு எந்த விதமான நஷ்ட ஈடு தொகையும் கிடைக்கக்கூடியது அல்ல என்றும், 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளபடி செய்யக்கூடியது என்றும், நான் கேட்டுள்ள தொகை அதிகமானது என்று சொன்னால் சரியல்ல. விபத்து ஏற்படுத்தி இருசக்கர வாகன ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து தான் நஷ்ட ஈடு தொகை கேட்க முடியும் என்றும், 3ம்

எதிர்மனுதாரரிடமிருந்து நஷ்ட ஈடு தொகை கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.9 ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:– இல்லை.</u>**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.